பொதுவாக இருக்கக்கூடிய நல்ல விஷயங்களை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு மதம் அடிப்படை இல்லை. பொதுவாக இருக்கும் சில உண்மைகளை மாணவர்களுக்குத் தெரிவிக்கும்படியான யோசனையைச் செய்யலாம்.

SRI S. NAGARAJA MONIGAR: மத விஷயமான பாடங்களை பள்ளிகளில் போதிக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய முடியாவிட்டாலும் மதத்திற்கு எதிராக நடக்கும் பிரசாரங்கள், போதனைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: இந்தக் கேள்விக்கும் மூல கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. அதனால் வேறு கேள்வி போட வேண்டும்.

*Guineaworm disease*

* 207 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the places where Guineaworm disease is prevalent; and

(*b*) the steps taken to eradicate this disease?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) A paper* is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR: இதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து கழிந்த ஆண்டு நமக்குக் கொடுக்கப்பட்டிருந்த உதவிப் பணம் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: I am not aware of any such help.

SRI M. K. SOMASUNDARAM: இம்மாதிரியான வியாதி திருநெல்வேலி பகுதிகளில் இருக்கிறது. அந்த வியாதியைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: திருநெல்வேலி ஜில்லாவில் இல்லை. எதோ எங்கேயோ ஒரு பகுதியில் ஒன்றிரண்டு இடங்களில் இருக்கிறது. புள்ளி விவரங்கள் கொடுக்கும்படியான அளவில் அங்கே இல்லை.

SRI S. RAMALINGA PADAYACHI: இம்மாதிரியான வியாதி வருவதற்கு குடி தண்ணீர்தான் காரணமாக இருக்கிறது. குட்டை குளங்களில் தண்ணீர் குடிப்பதினால் நல்ல குடி தண்ணீர் இல்லாத காரணத்தால் இது வருகிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்து இதைச் தேசியப் பிரச்சினையாகக்கருதி பார்த்தால் தெரியும். ஆகவே பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் அமைக்கும் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த நோயை தீர்த்துகட்ட வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு திட்டம் போட்டு சுமார் இரண்டு அல்லது மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்து இந்த நோய் இப்பொழுது இருக்கும் இடங்களிலிருந்து குறைக்க வேண்டும் என்பதற்காக அதைப் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI M. K. SOMASUNDARAM: திருநெல்வேலி ஜில்லாவுடன் மற்றும் எவ்வளவோ இடங்களில் இந்த வியாதி அதிகமாக இருந்து கொண்டு இருக்கிறது. இது வராமல் தடுக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்து என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER: நீங்கள் சொல்லும் இடங்கள் இந்தக்கேள்வியில் இல்லை. கேள்வி பொதுவாகத்தான் இருக்கிறது.

---

* Printed as Appendix II on page 147 *infra*.

11th February 1959]

SRI K. R. VISWANATHAN : இந்த நோயானது தேசீய நீர் வழங்கு திட்டத்தின் (National water-supply and sanitation scheme) கீழ்கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ? அப்படியானால் அதன்படி நீர் வழங்க என்ன நடவடிக்கை சர்க்காரால் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம் கீழ் இருக்கும் என்று நினைக்கிறேன். மாகாணத்தில் ஐந்து ஜில்லாக்களில் இது அமுலில் இருக்கிறது. இந்த நோய் தென்னார்காட்டில் திருச்சியைவிட அதிகமாக இருக்கிறது. நாங்கள் ஏதோ வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு திட்டம் போட்டு அந்த அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். அதனால் அதை அமுல் பண்ணியே தீருவோம்.

SRI A. A. RASHEED : Sir, from the statement placed on the table of the House, it is seen that North Arcot and South Arcot districts have been much affected. May I know the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : That is probably because there, people take water from step-wells and ponds. I have got information that Harijans are not mostly affected and that is because, it is said, they do not take water from ponds and other such places, but only from draw-wells.

*Hostel for Adivasi students*

* 208 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லா, தாளவாடி மலைப்பிரதேசத்தில் தலமலையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆதிவாசிகளுடைய மாணவர்கள்—மாணவிகளுடைய ஹாஸ்டலானது எந்தக் கட்டிடத்திலிருக்கிறது?

(ஆ) சர்க்கார் மூலம் ஹாஸ்டல் கட்டிடம் கட்டப்படுவதற்கான பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறதா?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The residential school for Scheduled Tribes at Talamalai is housed in the District Board Chatram.

(*b*) No, Sir.

SRI P. G. MANICKAM : சார், ஜில்லா போர்டு சத்திரத்திலே இந்த ஹாஸ்டல் இருப்பதால் அங்கு படிக்கும் மாணவர்களுக்கு அநேக இடைஞ்சல்கள் உண்டாகிக் கொண்டு வருகின்றன. ஆகவே இந்த 1959-ம் வருஷத்திலாவது அங்கு ஒரு ஹாஸ்டல் கட்ட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN : அந்தச் சத்திரமானது நல்ல கண்டிஷனில் தான் இருக்கிறது. இப்பொழுதுதான் 810 ரூபாய் செலவு செய்து அந்த ஜில்லா போர்டு சத்திரம் பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் நிலைமையில் தனியாக வேறு கட்டிடம் கட்ட உத்தேசம் இல்லை.